DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.4 | Caste | : | |
| Name | | குபேந்திரன் | Age | | |
| Father Name | : | வடிவேல் | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 07.11.2022

**முதல் விசாரணை:—**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், 21.09.2019 ம் தேதியன்று மாலை 5 மணிக்கு என்னுடைய தங்கை அழுது கொண்டு எனக்கு போன் செய்தார், என்ன என்று கேட்டதற்கு நாங்கள் ( என்னுடைய தங்கை தேவி, என்னுடைய மச்சான் பாண்டிச்செல்வம், என் மாமனார் முருகையா) வீடு கட்டுவதற்கு சம்மந்தமாக பேசிக்கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டு நீலகண்டமூர்த்தி, ஆறுமுகம், பழனியாயி ஆகிய மூவரும் தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டு உங்களை கொல்லாமல் விட மாட்டேன்டா என்று சொல்லி நீலகண்டமூர்த்தி கட்டையை எடுத்து என்னுடைய மச்சான் பாண்டிச்செல்வம் மீது பின் தலை, நெஞ்சுப்பகுதி, இடுப்புப்பகுதியில் அடித்ததாகவும் மறுபடியும் நீலகண்ட மூர்த்தியும், ஆறுமுகமும் பழனியாயியும் ஒன்றாக சேர்ந்து கொண்டு என் மச்சான் பாண்டிச்செல்வத்தை அடித்து கொண்டதாகவும் அதை தடுக்க போன என் மாமனார் முருகையாவை அவர்கள் நெற்றிப்பகுதியிலும் தோள்பட்டையிலும் அடித்து விட்டதாகவும் என்னுடைய மச்சான் பாண்டிச்செல்வம் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்து விட்டதாகவும் இந்த விபரத்தை சொல்லி விட்டு ஆலங்குடி ஜி.எச். —க்கு வந்து விட்டோம் அண்ணா என்று சொல்லிவிட்டு என் தங்கை போனை வைத்து விட்டார். நாங்கள் ஆலங்குடி ஜி.எச்.—க்கு போனோம், மருத்துவமனையில் இங்கு பார்க்க முடியாது என்றும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் படி சொல்லிவிட்டார்கள். நாங்கள் மருத்துவரிடம் பாண்டிச்செல்வத்தை தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு அழைத்து செல்வதாக

சொல்லிவிட்டு நாங்கள் பாண்டிச்செல்வத்தை தஞ்சாவூர் வினோதகன் மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டோம். பின்னிட்டு 01.10.2019 அன்று திருச்சி நியூரோ ஒன் மருத்துவமனைக்கு பாண்டிச்செல்வத்தை அழைத்து சென்றோம், அங்கு 2 நாள் பாண்டிச்செல்வம் சிகிச்சையில் இருந்தார். 03.10.2019 அன்று காலை 11.26 மணிக்கு மருத்துவர் வந்து எங்களிடம் பாண்டிச்செல்வம் இறந்துவிட்டதாக சொல்லிவிட்டார். சாயுங்காலம் ஆலங்குடி காவல் நிலையத்திற்கு என்னுடைய மாமா முருகையா தகவல் சொல்லிவிட்டார். மறுநாள் 04.10.2019 அன்று திருச்சி அரசு மருத்துவமனையில் பாண்டிச்செல்வத்தின் உடலை சடலக்கூராய்வு செய்தார்கள். பின்னிட்டு பாண்டிச்செல்வத்தின் உடலை வீட்டிற்கு எடுத்து வந்து விட்டோம். போலிசார் என் மாமா முருகையாவை விசாரித்தார்கள். அப்போது நான் உடன் இருந்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,
PUDUKKOTTAI.
**SC.No.56 /2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | | P.W.5 | Caste | : | |
| Name | | பழனிசாமி | Age | | |
| Father Name | : | ரெங்கசாமி | | | |
| Village | | | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 07.11.2022

**முதல் விசாரணை:—**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. இறந்தவர் என்னுடைய அண்ணன் மகன் ஆவார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. சம்பவ தேதியில் நான் புதுக்கோட்டை ராஜேஸ்குமார் மனநல மருத்துவரிடம் என்னுடைய தம்பியை சிகிச்சைக்கு அழைத்து வந்து விட்டேன். நான் கிராமத்திற்கு சென்ற போது பாண்டிச்செல்வத்தின் மனைவி தேதி அவருடைய வீட்டில் நின்று அழுது கொண்டிருந்தார். நான் விபரம் கேட்ட போது தேவி என்னிடம் உங்கள் தம்பி மாரிமுத்துவும் முருகையாவும் பாண்டிச்செல்வத்தை மருத்துவமனைக்கு ஆலங்குடி மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள் என்ற விபரத்தை சொன்னார். பாண்டிச்செல்வம் மயக்கமாக வருவதாக சொல்வதால் அவரை காத்தான்விடுதி பஸ் நிறுத்தத்தில் படுக்க வைத்திருந்தார்கள். அதை நான் பார்த்தேன். ஏன் இங்கு படுக்க வைத்திருக்கிறீர்கள் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டியது தானே என்று நான் கூறினேன். பின்னிட்டு இருசக்கர வாகனத்தில் பாண்டிச்செல்வத்தை உட்கார வைத்துக் கொண்டு ஆலங்குடி ஜி.எச்.—க்கு மாரிமுத்துவும் முருகையாவும் அழைத்து சென்றார்கள். பின்னர் நானும் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு நான் போய் பார்த்த போது ஆஜர் எதிரி நீலகண்ட மூர்த்தி மருத்துவமனையில் தையல் போட்டுக்கொண்டிருந்தார்கள். பாண்டிச்செல்வத்தை மருத்துவமனைக்கு படுக்கையில் படுக்க வைத்திருந்தார்கள். முருகையா மருத்துவமனை வரண்டாவில் படுத்து கொண்டிருந்தார். பின்னிட்டு நர்ஸ் அம்மா கேஸ் எழுத வேண்டும் என்ற சொன்னார்கள், பிறகு என்னுடைய வேலையாக வீட்டிற்கு நான் வந்து விட்டேன். பாண்டிச்செல்வம் இறந்த தேதி குறிப்பிட்டு எனக்கு தெரியவில்லை, ஒரு வாரம் கழித்து இறந்திருக்கலாம் என்று பதில் அளிக்கிறார். என்னுடைய தம்பி மாரிமுத்து என்னிடம் கையொப்பம் போட்டால் தான் பாண்டிச்செல்வத்தின் உடலை தருவதாக சொன்னார்கள் என்று எனக்கு தகவல் சொன்னதால் நானும் ஆலங்குடி

காவல் நிலையம் சென்று அது சம்மந்தமாக கையொப்பம் போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*